அவர்கள் பிரிந்து செல்ல விரும்பாத காரணத்தால், ஏதோ ஒரு பங்கு இங்கே அவர்களுக்கு இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் அதைக் கேட்டார்கள். ஆனால் இன்றையதினம் இருக்கும் கேரள அரசாங்கத்திற்கும் மக்களுக்கும், அந்த அரண்மனைக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஆகவே, அந்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்து நமது மாநிலத்திற்கு அந்த அரண்மனையைத் திருப்பித் தரவேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அப்படிச் செய்தால் நிச்சயம் திரும்பப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கும். அதை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1956-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தம். அந்த அடிப்படையில் செலவைப் பகிர்ந்து கொள்கிறோம். நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றால், அதற்குக் கேரள அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு தலையீடு செய்து கேட்டாலும், கொடுக்க மாட்டார்கள். மத்திய அரசாங்கம் தலையீடு செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

குளங்களில் படர்ந்துள்ள "குழி தாமரை"

*545 வினா—**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்திலுள்ள குளங்களில் படர்ந்திருக்கும் "குழி தாமரை", "பட்டுப்பாசி" போன்றவைகளை அறவே அகற்றுவதற்குரிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, அந்தக் குளங்களில் வளர்ந்து இருக்கும் பாசியை அகற்ற முடியவில்லை. பயிர் வளர்வதற்குக் கெடுதி தருகிற பாசியாக இருக்கிறது. ஆகையால் அதை அகற்றுவதற்கு ஒரு தீவிர திட்டத்தை வகுத்து, விஞ்ஞான ரீதியில் அதை அகற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆங்காங்கு இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் குளங்களில் இருக்கும் பாசிகளை

1975 ஏப்ரல் 3]

அகற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தை அணுகி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவற்றை நீக்குவதற்கான காரியங்களை மேற்கொள்ளலாம்.

Cultivation of onion

* 546 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether any research into onion cultivation has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தமிழகத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்திற்கு வெளி நாட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு வெங்காய உற்பத்தியைப் பெருக்குவதற்கான தனி திட்டத்தை அரசாங்கம் வைத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இப்போது நல்ல, அதிகமாகப் பலன் தரக்கூடிய வெங்காய வகைகளை நாம் கண்டுபிடித்து அதை அந்த விவசாயிகள் மத்தியில பரப்பி வருகிறோம். அதைத் தவிர தனியாக இதற்கு ஊக்கமோ, சப்சிடியோ தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவர அறிக்கையிலே புதிதாக மூன்று தினுசான வெங்காய வகைகளை பரிட்சார்த்தமாக ஆங்காங்கு பயிரிட்டு வருவதாகக் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. இது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி விளக்கமாக இல்லை. சி.எஸ். 911 ரகம் எல்லாப் பிரதேசங் களிலும் விளையும் நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது அந்த விவசாயிகளுக்கு பயிரிடுவதற்குக் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அதிகம் பயிராகும். ஏன் இதுநாள் வரையில் இந்த அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்ட் இந்த வெங்காயத்தில் கான்சன்டிரேட் செய்யவில்லை? அப்படி இப்போது கான்சன்டிரேட்

@ -ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

செய்து பார்க்கிற நேரத்தில், பலன்தரும் வேறு வெரைடி கண்டு பிடித்து இருக்கிறார்களா? பெல்லாரி வெங்காயத்தைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இங்கே கொடுத்து இருக்கும் விவர அறிக்கையில், அதுபற்றி விளக்கம் இல்லை. பெரிய பெரிய டவுன்களில் பெல்லாரி வெங்காயம் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, உடனடியாக அதற்கு ஏதுவாகிற வகையில் பெரிய வெரைடி வெங்காயத்தைக் கண்டு பிடித்து, விவசாயிகள் பயிர் செய்ய கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெல்லாரி வெங்காயத்தைப் பற்றிய பரிட்சை இன்னும் முடிவு அடையவில்லை. நல்ல பலன் தரக்கூடியது என்பது உறுதியாகவில்லை. சி.எஸ். 911 என்ற வெங்காயத்தை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் பரப்பி வருகிறோம். இதில் சுளைகள் சிறிதாக இருக்கின்றன. மக்கள் இதை விரும்புகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், நல்ல சிவப்பு நிறமாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஏக்கருக்கு ஏறத்தாழ 60 நாட்களில் 5 டன்—5,000 கிலோ பயிராகிறது. இது மிகுதியான பலன் தருவதால் மக்கள் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்பப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விதைகள் தேவைப்படுமானால் துறை மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. என். மருதாசலம் : வெங்காயத்திலே கறி வெங்காயத்தைக் காட்டிலும் ஈர வெங்காயம் அதிகச் சத்துள்ளது என்று சொல்லப்படுகிறது. அதை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெங்காயம் ஈரமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஈர வெங்காயம் என்பது சின்ன வெங்காயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குகிறார்கள். இது சின்ன வெங்காயந்தான். இதன் சுளை சிறிதாக இருக்கும் காரணத்தால் மக்களால் விரும்பப்படுகிறது. விளைச்சல் அதிகமாக இருக்கும் காரணத்தால் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற உறுப்பினர்களும், மற்றவர்களும் மிகுதியான அளவில் இதைப் பயிரிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.